**அக்மீமன பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 25 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஜுன் 04 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 23 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான அக்மீமன பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் காசுப் பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளுராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையினால் கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 22,326,091 இற்கான நிலையான சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 381,900 பெறுமதியான கணனிகள் மற்றும் துணைக்கருவிகள் என்பனவற்றை பொறியும் பொறித் தொகுதிகளின் கீழ் காட்டப்படாமல் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(இ) சபை அலுவலகத்தில் நடத்தப்படும் ஆயுள்வேத, நூலக மற்றும் கேற்போர்கூட கட்டடத்தை நிர்மானிப்பதற்காக உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி

நிதியத்தில் இருந்து பெற்றிருந்த ரூபா 1,833,358 இற்கான கடன் தொகை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கான சபை மந்திரிமார் படி ரூபா 903,000 தொகை எனினும் அவற்றில் ரூபா 521,250 இற்கான மோட்டார் சைக்கில் கடன் தவணைப்பண அறவீடுகளை கழித்து ரூபா 381,750 தொகை மாத்திரம் சபை மந்திரிமார் படி என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான செலவு ரூபா 521,250 இனை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) ரூபா 439,798 இற்கான நிலையான சொத்துக்கள் கொள்வனவுகள் மீண்டுவரும் செலவுகள் என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) முன்னைய ஆண்டிற்கான 09 வேலைத்திட்டங்கள் மற்றும் மீளாய்வாண்டிற்கான 18 வேலைத்திட்டங்கள் என்பவற்றிற்கான முறையே செலுத்த வேண்டியிருந்த செலவுகளாகிய ரூபா 4,144,692 தொகை மற்றும் ரூபா 5,003,054 தொகையும் ஆக மொத்தம் ரூபா 9,147,746 இற்காக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையால் திரண்டநிதியக் கணக்குகளின் மீதி ரூபா 4,144,692 இனால் மிகையாகவும் மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவுகள் ரூபா 5,003,054 இனால் குறைவாகவும் கடன் கொடுத்தோர் ரூபா 9,147,746 இனால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தன.

(எ) மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 2,313,313 இற்கான மூலதன உதவிகள் அவை நிதிக் கூற்றுக்கள் மூலதன உதவிகள் எனக் காட்டப்படாமல் பொது வைப்புக்கள் என காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான மூலதன வருமானம் ரூபா 2,313,313 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் போது மேற் கொள்ளப்பட்டிருந்த 08 நிர்மாண வேலைகளுக்கான செலவுகள் ரூபா 7,380,360 தொகை எனினும், ரூபா 738,035 இற்கான 10% தடுத்துவைத்தல் கட்டணத்தை செலவுகள் என கணக்கீடு செய்யப்படாமையால் நிதிக் கூற்றுக்களில் மீளாய்வாண்டிற்கான மூலதன செலவு ரூபா 738,035 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 217,220 இற்கான மீண்டுவரும் செலவுகளுக்காக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் செலவுகள் ரூபா 217,200 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஒ) மீளாய்வாண்டு தொடர்பாக கிடைக்க வேண்டிய நீதிமன்றதண்டப்பண வருமானம் ரூபா 2,399,475 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 2,337,558 என காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 61,917 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வு பெற்றுள்ள உள்ளூராட்சி ஊழியர்களுக்கு செலுத்த வேண்டியிருந்த ஓய்வூதியப் பங்களிப்பு தொகை ரூபா 2,831,960 இற்காக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1.3.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

04 கணக்கு விடயங்கள் தொடர்பான கட்டுப்பாடுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப்பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 6,294,253 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிதிக் கூற்றுக்களில் காட்டப்படடிருந்த கூட்டுத்தொகை ரூபா 79,442,686 இற்கான கொடுக்கல் வாங்கல் தொடர்பாக காணி உறுதிகள், பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள், நாளது வரை பேணப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் பதிவேடு, கணிபாபீட்டுச் சபை அறிக்கைகள், பட்டோலைகள், முறையாக பேணப்பட்டு வரும் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடுகள், மீதிகளை உறுதிப்படுத்தல்கள், காலப்பகுப்பாய்வுகள் முறையாக பேணப்படும் முற்பணப்பதிவேடுகள் மற்றும் வைப்புப் பதிவேடுகள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,617,686 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,825,908 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 வீதவரி மற்றும் ஏக்கர் வரி

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 2,295,360 இற்கான வீதவரி மற்றும் ரூபா 298,145 இற்கான ஏக்கர் வரி என்பவற்றை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158 இன் பிரகாரம் அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை

2.2.2 வர்த்தக அனுமதிப் பத்திரக்கட்டணங்க் மற்றும் வாடகை

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 215,962 இற்கான வர்த்தக அனுமதிப் பத்திரக்கட்டணங்கள் மற்றும் ரூபா 261,125 இற்கான வாடகை என்பவற்றை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159 இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்து 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,905,102 இற்கான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 23,428,280 இற்கான முத்திரை கட்டணமும் கிடைக்க வேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சொத்துகள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் கூற்று சமர்பிக்காமை

1998 இன் 74 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டிருந்த 1975 இன் 01 இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் கணக்காய்வுத் திகதியாகிய 2014 ஜனவாரி 27 திகதி வரை தலைவர், உபதலைவர் மற்றும் 11 மந்திரிமார்கள் மீளாய்வாண்டிற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் கூற்றுக்களை சமர்பித்திருக்கவில்லை

(ஆ) மதியுரை குழுக்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சட்டத்தின் பிரிவுகள் (1) மற்றும் (2) இன் பிரகாரம் நிதி மற்றும் திட்டமிடல், வீடமைப்பு மற்றும் சன சமூக அபிவிருத்தி, தொழில்நுட்ப சேவை மற்றும் சுற்றாடல் மற்றும் வசதிகள் ஆகிய ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் பிரதேச சபைக்கு ஆலோசனை வழங்குவதற்காக தனிப்பட்ட குழுக்கள் நியமிக்கப்படல் மற்றும் சபையினால் சபையின் அதிகாரங்கள் அல்லது கருமங்கள் ஏதேனும் தீர்மானிக்கக் கூடிய நிபந்தனைகளின் அடிப்படையில் காலத்திற்கு காலம் அக் குழுக்களுக்கு சாட்டுதல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் 2013 ஆண்டிற்கான அக்குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்த போதும் அவை செய்பட்டிருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

(அ) சபைக்குச் சொந்தமான கப் வண்டி 2011 ஜனவரி 22 திகதி விபத்துக்கு உள்ளாகியிருந்தது. அத்துடன், அதனை திருத்துவதற்காக 2012 ஜனவரி மாதம் ரூபா 288,612 தொகையும், 2013 திசெம்பர் மாதத்தில் ரூபா 360,461 தொகையுமாக மொத்தம் ரூபா 649,073 தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து ஒரு நிறுவனத்திற்கு செலுத்தியிருந்தது. சாரதியினால் விபத்து நடந்துள்ள முறையை கூறியுள்ள வித்தில் அவ்விடத்தில் அவ்வாறான விபத்து ஒன்று ஏற்பட்டிருக்கவில்லை எனவும் வாகனத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டமும் விபத்துடன் இணங்கி காணப்படவில்லை எனக் குறிப்பிட்டு கூட்டுத்தாபனத்தினால் காப்புறுதி நட்டஈடு வழங்குவதை மறுத்துள்ளது.

3.3 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

3.3.1 நீர் பவுசர் தொட்டிகள் இரண்டு கொள்வனவு செய்தல்

நீர் பவுசர் தொட்டி இரண்டு சபைக்கு கொள்வனவு செய்வதற்காக 2012 ஏப்ரல் 10 ஆந் திகதி பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதுடன் கூறுவிலைகள் அழைக்கப்பட்டிருந்தன. கிடைத்திருந்த கூறுவிலைகள்களை சபைக்கு சமர்பித்திருந்த பின்னர் ரூபா 300,000 இற்கான குறைந்த கூறுவிலையை ஏற்றுக் கொள்வதற்கு 2012 ஜுன் 12 பொதுக் கூட்டம் அங்கீகாரம் வழங்கியிருந்தது.

தலைவர், 2012 ஜுன் 25 திகதி குறைந்த விலை சமர்பித்திருந்த நிறுவனத்தின் முகாமையாளருக்கு கடிதம் அனுப்பியிருந்தார் சமர்பித்திருந்த கூறுவிலையின் பிரகாரம் ஒரு நீர் பவுசர் சபைக்கு வழங்குமாறும் அதனை பெற்றுக் கொண்ட உடன் காசோலை ஒன்றின் மூலம் மொத்த தொகையை கொடுப்பனவு மேற்கொள்ள முடியும் எனவும் அதில் குறிப்பிட்டிருந்தார்.
வழங்குனர் 2012 ஜுன் 30 திகதி 3,200 லீற்றர் முதலாவது நீர் தொட்டியினை சபைக்கு அனுப்பியிருந்தார். அதற்காக 2012 ஜுலை திகதி 263 இலக்க விலைப்பட்டியை சபைக்கு ஒப்படைத்து 2012 ஆகஸ்ட் 27 திகதி ரூபா 300,000 இனை அந்நிறுவனத்திற்கு செலுத்தியிருந்தது.

நிறுவனத்தினால் 2013 மார்ச் 04 திகதி இரண்டாம் நீர் பவுசர் தொட்டி சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 2013 மார்ச் 04 திகதி ரூபா 300,000 இற்கான விலைப்பட்டி சபைக்கு ஒப்படைத்திருந்தது. 2013 மே 14 ஆந் திகதி, சபையின் கொடுப்பனவு அங்கீகாரம் என உறுதிச் சான்றில் குறிப்பிட்டு 3,200 லீற்றர் நீர் பவுசர் கொள்வனவிற்கான விலைப்பட்டி தீர்த்தல் என குறிப்பிட்டு ரூபா 300,000 தனிப்பட்ட பேரில் என உறுதிச் சான்றில் குறிப்பிட்டு சபை நிதியத்தில் இருந்து கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ் உறுதிச் சான்றுடன் இணைக்கப்பட்டிருந்த நிறுவனத்தினால் சமர்பித்திருந்த 2013 மார்ச் 04 திகதிய இலக்கம் 323 கொண்ட விலைப்பட்டியல் தலைவரினால் சபை செயலாளருக்கு எழுத்துருவில் குறிப்பொன்று எழுதி, குறுக்கு கோடு இடப்படாமல், பேருக்கு காசோலையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி குறிப்பிட்டிருந்தார். கொடுப்பனவு உறுதிச் சான்றும், கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட காசோலை இலக்கம் மற்றும் திகதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன் கொடுப்பனவு காசேடு மற்றும் காசோலை அடிச்சீட்டின் பிரகாரம் 2013 மே 14 ஆந் திகதி இலக்கம் 416824 கொண்ட காசோலை தனிப்பட்ட நபர் ஒருவரின் பேரில் எழுதப்பட்டிருந்தது எனவும் அத்துடன் அதே தினத்தில் காசோலை காசாக்கப்பட்டிருந்ததென எனவும் வெளிப்படுத்தப்பட்டது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(I) சபைக்கு நீர் பவுசர் தொட்டிகள் இரண்டு கொள்வனவு செய்வதல் தொடர்பாக தகவல்கள் அடங்கிய கோவை ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(II) நிறுவனத்தினால் இரண்டாவது நீர் பவுசர் தொட்டி 2013 மார்ச் 04 திகதி சபைக்கு வழங்கி, அதே திகதியில் ரூபா 300,000 இற்கு இலக்கம் 323 விலைப்பட்டியல் சபைக்கு சமர்பித்திருந்த போதும், காசோலையை குறிப்பிட்ட நிறுவனத்தின் பேரில் எழுதப்படாமல் தனிப்பட்ட பேரொன்றிற்கு குறுக்கு கோடிடப்படாமல் காசோலை வழங்கியிருந்தது. காசோலை முதல் கையொப்பம் வைத்திருக்கும் முகாமைத்துவ உதவியாளர்(வழங்கல் அலுவலர்) இனால் அக் காசோலையை வங்கிக்குச் சமர்பித்து முறையற்ற விதமாக காசாக மாற்றியிருந்தார்.

3.3.2 மின் பிறப்பாக்கி ஒன்று கொள்வனவு செய்தல்

2013 ஆகஸ்ட் 22 திகதி சபை நிதியத்தில் இருந்து ரூபா 875,000 செலவிடப்பட்டு மின் பிறப்பாக்கி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆகஸ்ட் 01 திகதி சபைச் செயலாளரினால் 10 கிலோவோட் சத்தம் இன்றிய டீசல் மின்பிறப்பாக்கி ஒன்றிற்காக கூறுவிலைகளை சமர்பிக்குமாறு 03 நிறுவனங்களுக்கு அறிவித்திருந்தது அத்துடன் ரூபா 875,000 இற்கான குறைந்த கூறுவிலை சமர்பித்திருந்த நிறுவனத்திற்கு அதனை வழங்குமாறு 2013 ஆகஸ்ட் 14 திகதி அறிவித்திருந்தது.

(ஆ) அவ் இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்காக அதற்கான நியமக குறியீடுகள் தயாரித்திருக்கவில்லை. அத்துடன் சமாந்திருந்த கூறுவிலைகள் தொழில்நுட்ப மதியுரை குழு ஒன்றுக்கு சமர்பித்து அதன் விதப்புரையினை பெற்றிருக்கவில்லை.

(இ) மின்பிறப்பாக்கி கொள்வனவு செய்திருந்த நிறுவனத்தினர் சமர்பித்திருந்த கூறுவிலையில் உத்தரவாத காலம் குறிப்பிட்டிருக்கவில்லை. அத்துடன் அது தொடர்பாக சபை அவதானம் செலுத்தியிருக்கவில்லை.

(ஈ) மின் பிறப்பாக்கி 2013 ஆகஸ்ட் 30 சபைக்கு கிடைத்திருந்ததுடன் அதற்கு முன்னர் 1030 இலக்க உறுதிச் சான்று மூலம் 2013 ஆகஸ்ட் 22 திகதி குறுக்கு கோடிடப்படாத ரூபா 875,000 பெறுமதியான காசோலை ஒன்று வழங்குனர் அல்லாத ஒரு நபரின் பெயர் எழுதப்பட்டிருந்தது. அக் காசோலையை அவர் 2013 ஆகஸ்ட் 23 திகதி வங்கியில் காசாக்கியுள்ளார். 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி இலக்கம் 115 மற்றும் இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 137 இன் ஏற்பாடுகளுக்கு முரணாக மின்பிறப்பாக்கி சபைக்கு கிடைக்க முன்னர் அதற்கான கொடுப்பனவு மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(உ) மின் பிறப்பாக்கியுடன் வழங்கியிருந்த செயற்பாடு மற்றும் பராமரிப்பு பற்றிய கைநூல் பொதுவான கைநூலாகவே காணப்பட்டது. அது இந்த மின் பிறப்பாக்கியுடன் தொடர்புடையதொன்றாக காணப்படவில்லை.

(ஊ) சபை வழங்குனருடன் முறையான உடன்படிக்கையொன்று மேற்கொண்டிருக்கவில்லை. அத்துடன் உத்தரவாத காலமொன்று குறிப்பிடப்பட்டிருக்காமையால் மற்றும் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்படாமையால் தற்போது ஏற்பட்டுள்ள திருத்த வேலைகள் தொடர்பாக சிக்கல் நிலைமை ஒன்று உருவாகியிருந்தது.

(எ) 2013 ஆகஸ்ட் 30 திகதி சபைக்கு கிடைத்திருந்த இந்த மின் பிறப்பாக்கி 2014 ஏப்ரல் 09 திகதி தென் மாகாண பொறியியல் சேவை அலுவலகத்தின் மின் அத்தியட்சகர் தென் மாகாண, உள்ளூராட்சி திணைக்களத்தின் இயந்திர பொறியியலாளர் மற்றும் கணக்காய்வு அலுவலர்களினால் கூட்டிணைந்து பௌதீக பரிசோதனை மேற் கொள்ளப்பட்டிருந்தது. தற்போது மின் பிறப்பாக்கி செயற்படாத நிலையில் காணப்பட்டதுடன் இயந்திர பொறியியலாளர் மற்றும் மின் அத்தியட்சகர் ஆகியோரினால் பின்வரும் அவதானிப்புக்கள் மேற் கொள்ளப்பட்டிருந்தன.

(I) மின் பிறப்பாக்கிக்கு உரிய பட்டறி அங்கு காணப்படவில்லை. அத்துடன் மாற்றியல்(Alternator) இருந்து மின்சாரம் வரும் கம்பி எறிந்த நிலையில் காணப்பட்டது.

(II) பிரதேச சபை கட்டிடத்திற்காக மின் பிற்பாக்கியினை தொடர்புபடுத்தல் ஏற்படுத்தியிருக்கவில்லை.

(III) மின் பிறப்பாக்கியில் குறிப்பிட்டுள்ள மாதிரி, தொடர் இலக்கம் மற்றும் ஏனைய விபரங்கள் வழங்குனரினால் கூறுவிலையில் சமர்பித்திருந்த விபரங்களுடன் இணங்கியிருக்கவில்லை. ஓல்டனேடரின் மாதிரி மற்றும் இலக்கம் வித்தியாசமாகக் காணப்பட்டதுடன் ஓல்டனேடரும் விலை கூற விலையில் குறிப்பிட்டிருந்த உற்பத்தி ஒன்றாகக் காணப்படவில்லை.

4. கணக்கு விடங்களும் மற்றும் நல்லாட்சியும்

-----------------------------------------------------------------

புதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

-------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை 12 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அனுப்பியிருக்கவில்லை. அவ் ஐய வினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களில் கணக்கிட கூடியதான பெறுமதி ரூபா 4,341,057 ஆகும்.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் சபையின் விஷேட கவனம் தேவைப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு

(இ) நிதிக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிருவாகம்

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்